**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.54/2019**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கர் | மதம் | : இந்து |
| த/பெ | : தனபால் | ஜாதி | : -- |
| வயது | : 27 | கிராமம் | : மாமண்டுர் |
| தொழில் | : இருசக்கர வாகன ஆலோசகர் | வட்டம் | : திருத்தணி |

**02.02.2026**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 13.11.2015ம் தேதியிட்டு பட்டா எண்.165க்கு பெரியசாமி ரெட்டி பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 07.12.2015ம் தேதியிட்டு பெரியசாமி ரெட்டி எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. வழக்கு சொத்திற்கு என் அப்பா பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (17 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 3 வரிசை (17 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கு என் அப்பா பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் (47 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ 4 வரிசை (47 எண்ணம்) ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கு 01.01.2000 முதல் 16.08.2019 வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 26.08.2019ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)